புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 December 2023 ISSN: 2456-821X

# சங்கத்தமிழரின் திருமணம்

திருமதி.ச.பாக்கிய கனி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தமிழாய்வு மையம்,
தூத்துக்குடி.

## முன்னுரை:

பண்டைத்தமிழரின் பண்பட்ட வாழ்க்கையை உலகறியச் செய்யும் பெட்டகமாக எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் திகழ்கின்றன. இவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும், மாண்பையும் தெளிவாக காட்டுகின்றன. இவற்றின்கண் காணப்படும் தமிழரின் திருமண முறைகளை இக்கட்டுரையின் வாயிலாக விரிவாகக் காணலாம்.

## திருமணம் :

ஒரு ஆணும் ஒரு பெண்ணும், கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்த இசைந்து ஒன்று சோவதே திருமணமாகும்.

## திருமண வகைகள் :

கற்பெனத் தொல்காப்பியரால் குறிப்பிடப்பெறும் திருமணம்இருவகைப்பட்டதாக உள்ளது.

- பெற்றோர் கொடுக்க ஏற்ற தகுதி உடையவர் கொள்ளும் மணமுறை
- காதலித்துத் தேடிக்கொண்ட துணையுடன் பெற்றோரை விட்டுப்பிரிந்து உடன்போக்கில் சென்று செய்துகொள்ளும் மணமுறை.

“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக் குரிமரபினோர் கொடுப்பக்கொள் வதுவே”[1]

## பெற்றோர் தகுதியுடையோருக்கு திருமணம் செய்தல்:

'கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள் வதுவே' எனத் திருமணம் செய்துகொள்ளும் தகுதியுடைய தலைவனுக்குக் கொடுத்தற்குரிய மரபினை உடையாராகிய 'பெற்றோர் கரணம்'' எனப்படும் சடங்கோடு தலைவன் தலைவியைப் பெற்றுக்கொள்ளும் முறை எனக் கற்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

*காதல் திருமணம் :*

*பெற்றோர் கட்டுப்பாட்டை மீறி, பெண் தனது துணையைத் தானே தேடிக் கொள்ளும் முறையும் தனித்ததொரு முறையாக இருந்துள்ளது. காதலித்த நிலையில், அக்காதலுக்குப் பெற்றோர் உடன்பாடு இல்லாத நிலையில் காதலர் இருவரும் வீட்டை விட்டு வெளியேறும் உடன்போக்குத் திருமணத்தையும் தொல்காப்பியர்,*

*"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே*
*புணர்ந்துடன் போகிய காலை யான"[2]*

*என வரையறுத்துள்ளார்.*

*திருமண நிகழ்வில் இருவகை :*

*சங்ககாலத் திருமணத்தை இரண்டாகப் பகுக்கலாம்.*

- *திணைமரபுத் திருமணம்*
- *மறுதலைத் திருமணம்*

*திணை மரபுத் திருமணம் :*

*உரோகிணியுடன் சந்திரன் கூடிய நல்ல நாளில் வீட்டில் விளக்கேற்றி மாலைகளைக் கட்டி செறிந்த இருள் நீங்கிய அதிகாலையில் பெண்டிர் புதிய பானைகளைத் தர, அதைப் பெற்றுக்கொண்ட புதல்வரைப் பெற்றெடுத்த மங்கலப் பெண்டிர் நால்வர் கூடி, கற்பு நிலை வழுவாமல் பெற்றோர் விரும்பும் துணையாகுக என வாழ்த்தி, நெல்லும் மலரும் இடப்பட்ட நீரைத் தலையில் சொரிந்த வதுவைமணம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வதுவையைக் 'குளிப்பாட்டு கலியாணம்" என்கிறார் நச்சினார்க்கினியர்.*

*"தருமணற் றாழப்பெய் தில்பூவ லூட்டி*
*எருமைப் பெடையோ டெமரீங் கயரும்*
*பெருமணம்"[3]*

*எனக் கலித்தொகை குறிப்பிடும் மணமும் திணை சார்ந்த சடங்கு வழிபட்ட இயல்புத் திருமணமாகவே உள்ளது.*

*மரபு முறைக்கு மறுதலைத் திருமணம் :*

*இந்த திருமண முறையானது திணை மரபுத் திருமண முறைக்கு வேறாக*

*"வரையிழி யருவியிற் றோன்று நாடன்*
*தீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்*
*வந்தன்று வாழி தோழி நாமும்*
*நெய்பெய் தீயி னெதிர் கொண்டு*
*தான்மணந் தனைய மெனவிடுகந்தூதே"[4]*

*என நெய் ஊற்றி மூட்டப்பட்ட தீயின் முன்னர் நடக்கும் திருமணத்தைக் குறுந்தொகை குறிப்பிட்டுள்ளது. இது அந்தணப் புலவராகிய கபிலர் பாடிய பாடலாக இருப்பதையும் இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பாரியின் பெண்டிரை இருங்கோவளிடம் அழைத்துச்சென்று, "அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே" எனக்கூறி "யான் தர இவரைக் கொண்மதி"[5] எனக் கூறுவதும் அந்தணன் கொடுக்கக் கொள்ளும் மணமுறைக்குச் சான்றுகள்,*

*"மடந்தைதன் துணையாக*

ஓதுடை யந்தணன் எரிவலஞ் செய்வான்போல்
ஆய்தூவி யன்னந்தன் யானிநடைப் பெடையொடு
மேதகந் திரிதரும் மிகுபுனல் நல்லூர்''[6]

என உவமையாகக் கூறப்பட்டுள்ளது. ஆக, தீவலம் வந்து மணக்கும் திருமணம், சங்ககாலத் திருமண முறைக்கு வேறாகக் காலமாற்றத்தின் விளைவாக நிகழ்ந்திருப்பதையும் இந்தச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

திருமண நிகழ்விடம் :

சங்ககாலத் திருமணங்கள் பெண் வீட்டிலேயே நடைபெற்றுள்ளன. நல்ல நாளில், குளிர்ந்த பந்தலிலே, புதுமணல் பரப்பப்பட்டிருந்தது. பூமாலைகள் புனைந்து தொங்கிக் கொண்டிருந்தன. இரவு நேரம் கழிந்து, காலை நேரம் வந்தது. கல்யாணப் பந்தலிலே வரிசை வரிசையாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

வயதேறிய நல்ல பெண்கள் தம் தலையிலே தண்ணீர்க் குடத்தை ஏந்தி நின்றனர். அந்த நீக் குடங்களை முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றிக் கொடுத்தனர். பிள்ளை பெற்ற நான்கு மாதர்கள் அந்த நீக் குடங்களை வாங்கி மணமகளை நீராட்டினர். நீராட்டும் போது, ''அவள் கற்பு தவறாமல் கணவனுடைய அன்புக்குரியவளாய் ஆகுக'' என வாழ்த்தினர்.

பின்னர், பெற்றோர் மணமக்களை வாழ்த்தி மணமகனிடம் கொடுத்தனர் அதன்பின், சுற்றத்தார் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

திருமணத்தின் பல்வேறு முறைகள் :

திருமணம் நடைபெற தலைவன்-தலைவிக்காகவும், தலைவி-தலைவனுக்காகவும், பெற்றோர்-மணமக்களுக்காகவும் பல்வேறு படிநிலைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொருள் கொடுத்து மணத்தல்:

பெண்ணை மணம் பேச வரும் ஆடவன் திருமண பரிசுப் பொருளாக தலைவிக்கு அணிகலன்களையோ அல்லது பணமாகவோ அளித்தான். தகுதியில்லாதவன் எவ்வளவு பரிசம் அளித்தாலும் பெண்ணைத் தர மாட்டேன் என்பதை,

''முழங்குகடன் முடிவின் முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிவந்து கொடுப்பினும்
புரைய ரல்லோர் வரையல ளிவளெனத்
தந்தையும் கொடா அன்''[7]

என்று கூறும். மேலும் இப்பாடல், தகுதியுடையவன் பரிசுப்பொருள் கொடுத்து, அதன் வாயிலாக மணக்கும் வழக்கம் இருந்ததை உணர்த்துகின்றது. இதை ''பரிசமளித்து மணத்தல்'' என்றும் அழைப்பர்.

உடனிருந்து உழைத்து மணம் புரிதல் :

பெண் வீட்டில் தங்கியிருந்து, அவர்களுக்காக உழைத்து, பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதும் ஒரு மண முறையாகும். இத்தகு திருமணம் அகநானூற்றில்280 ஆம் பாடலில் காணப்படுகின்றது. பெண்ணை விரும்பியவன் பொருள் கொடுத்து அவளை மணக்க இயலாது என்பதை தீமானித்துக் கொண்ட பின், பெண்ணின் தந்தையுடன் இணைந்து, அவன் செய்யும் எல்லா வேலைகளிலும் ஈடுபடவும், அவனுக்குப் பணிந்து இருக்கவும் விரும்பும் விருப்பத்தைத் தெரிவிக்கின்றது இப்பாடல்.

*“நலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும்*
*பெறலருங் குரைய ளாயி றைந்தெரிந்து*
*நாமுறை தேஎ மரூஉப்பெயர்த் தவனொ*
*பிருநீச் சேர்ப்பி னுப்புட னுழந்தும்*
*பெருநீக்குட்டம் புணையொடு புக்கும்*
*படுத்தனம் பணிந்தன மடுத்தன மிருப்பிற்*
*தருகுவன் சொல்லோ தானே”?*[8]

*எனும் இந்தப் பாடல் வெளிப்படுத்தும் 'நம் நாட்டை விட்டு மீண்டுப் பெயர்ந்து வந்து உப்பை விற்று திரிந்து வருந்தியும், பெருங்கடலில் மீன்பிடி பகுதிக்குச் சென்று மீன் பிடித்தும் அவன் வசமாகியும் அவனுக்குப் பணிந்தும், அவனைச் சார்ந்தும் இருப்போமானால் பெண் தருவானோ பெருந்துறைப் பரதவன்' எனும் தலைவனின் இந்த விருப்பக் கூற்று வெறும் கூற்று மட்டுமே அன்று. இப்படி மணக்கின்ற முறையும் பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் இருந்திருக்க வாய்ப்புண்டு என்பதைக் காட்டும் இயல்பானதாகவும் இது அமைந்துள்ளது.*

*ஏறுதழுவல் மணம் :*

*“கொல்லேறு தழுவுதல்” உயிருக்கு உலைவைக்கும் ஆபத்தான செயல். ஆயினும் அச்செய்கையில் வெற்றி பெறுகின்றதவனையே ஆயர்குலப் பெண்கள் ஆண் மகனாக மதிப்பர். இல்லறத்தை இனிது நடத்துவதற்கு ஏற்றவனாக எண்ணுவள்.*

*“கொல்லேற்றுக் கோடஞ்சு வானை, மறுமையும்*
*புல்லாளே ஆய மகள்”*[9]

*என அச்சப்படும் கோழைகளுக்கு அல்லாமல் கொல்லேற்றை அடக்கும் ஆஅரையே ஆய மகளிர் மறுமையிலும் மணப்பர் என்பது முல்லைக்கலிச் சமுதாயத்தின் வரையறுத்த திருமண முறையாக இருந்துள்ளது.*

*தலைக்கட்டு கட்டுதல் :*

*“தண்டுடைக் கையர் வெண் தலைச் சிதவலர்”*[10] *என்ற பாடல், திருமணம் தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்ற காலங்களில், பெரியோர்கள் தங்கள் தலைகளிலே துணியால் “தலைக்கட்டு” கட்டிக் கொள்ளும் நிலையை உணர்த்துகின்றது. இதனால், பெரியாரை மணம் பேச விடும் அக்கால வாழ்வியல் நெறியுணர்த்தப்படுகிறது. மகட்பேசுதற்கு ஆண்டானும் அறிவானும் முதிர்ந்த சான்றோர் செல்லும் வழக்கம் உண்டு என்ற பொ.வே.சோ-வின் கருத்து மேலதற்கு அரணாக உள்ளது.*[11]

*சிலம்புகழி நோன்பு :*

*'சிலம்பு' என்பது மகளிர் காலில் அணியும் அணிகலனாகும். திருமணத்திற்கு முன் இவ்வணியை நீக்கும் மரபு சிலம்புகழி நோன்பாகும். இவ்வழக்கம் வதுவைச் சடங்காகப் பழந்தமிழரிடம் காணப்பட்டது.*

*“தன் கால் அரி அமை சிலம்பு கழீஇ”*[12]

*என்ற பாடல் இதனை உணர்த்துகிறது. பெற்றோரிடம் வாழ்ந்த வாழ்விலிருந்து வேறுபட்டு, திருமணமானவுடன் கணவனுடன் வாழும் வாழ்க்கை அமைவதால் இச்சடங்கு முறை நடத்தப்படுகின்றது.*

பாவை நோன்பு :

நம் தமிழ்நாட்டில் பண்டை நாள் தொட்டு கன்னிப்பெண்கள் மழை வளங்குறித்தும், மாண்புடைய கணவரை அடைதற் பொருட்டும் மார்கழித்திங்கள் வைகை கரையில் நீராடிப் பராசக்தியை வழிபட்டு பாவை நோன்பு நோற்றாரெனப் பரிபாடல் பறைசாற்றுகின்றது.

"வெம்பா தாக வியனில வரைப்பென"[13]

என்று இக்கருத்தை பரிபாடல் மகளிர் வரம் வேண்டியதாகக் குறித்து, இதை 'மார்கழி நீராடல்' என்றும் அழைப்பர்.

தை நீராடல் :

மார்கழி திங்கள், அம்மாதத்துத் திங்கள் நிறைந்த திருவாதிரை நாளில் ஆகமங்களை உணர்ந்த அந்தணர், ஆதிரைக்குத் தெய்வமாகிய சிவனுக்கு விழா எடுப்பர். முதுமகளிர் நோன்பு நோற்கும் முறைமையை முன்னின்று வழிகாட்ட கன்னியர் வையை நீர் படிந்து பாவை நோன்பாற்றினர். யாம் சிறந்த காதலரைச் சேரும் வீறு பெருக என வேண்டி நின்றனர். மேலும் பூவில் தேனுண்ட வண்டு, அப்பூவை நீங்குதல் போல, எம்மால் விரும்பப்படும் கணவர் எம்மை விட்டு நீங்காமல் விரும்பிக் காப்பாராக எனவும் வேண்டினர்.

இவ்வாறு தலைவனும், தலைவியும் தாம் விரும்பியவரை அடைய, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, இல்லற வாழ்வில் இனிதே இணைந்தனர்.

திருமணத்தின் போக்கு :

இனிதே இல்லறத்தை தொடங்கிய பின்னர், குழந்தைப் பேறு இல்லாத காரணத்தினாலும், மன வேறுபாடுகள் தோன்றியதாலும், இறப்பு நிகழ்வுகளாலும் திருமணவாழ்வு பல்வேறு போக்குகளை சந்திக்க நேர்ந்தது.

இரண்டாம் திருமணம் :

தொல்காப்பியர் கற்பியலில் வரும் "பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை, தொன்முறை மனைவி எதிர்ப் பாடாயினும்"[14] எனும் நூற்பா பின்முறை வதுவை, தொன்முறை மனைவி எனும் இருவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இது இருதார மணமுறையை எடுத்துரைக்கும் நூற்பாவாக உள்ளது.

பலதாரமணம் :

பலரை மணந்துகொள்ளும் வழக்கம் இருந்துள்ளது என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இதற்கு அரச மரபே சான்றாக உள்ளது.

"வடமீன புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோள் அளவு அல்லதை
நினது என இல்லை பெருமிதத் தையே"[15]

எனும் பாடல் மலையமான் திருமுடிக்காரி ஒருதார மணமுறையை உடையவனாகக் காட்டப்பட்டுள்ளதற்கு மாறாக ஆயண்டிரன் பலதார மணமுறை உடையனாக

"ஆஅய் அண்டிரன்
கோடு ஏந்து அல்குல் குறுந்தொடி மகளிரொடு
காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப

மேலோர் உலகம் எய்தினான்”[16]

எனத் தன் மகளிரோடு இறந்து போனது குறிப்பிடப்பட்டு அவனது பலதார மணமுறை காட்டப்பட்டுள்ளது. இது சங்க கால வாழ்வில் குறிப்பாக, அரசர்களிடையே பல பெண்டிரை மணக்கும் முறை இருந்ததற்குச் சான்று. வேந்தர்கள் முதுகுடி மன்னரிடம் மகட்கொடை வேண்டிச் சென்றது அவர்களின் பலதார மணமுறைக்குச் சான்றாக உள்ளது.

முடிவுரை :

ஒத்த மனமுடைய தலைவனும் தலைவியும் இணையும் திருமணங்கள் பண்டைத் தமிழகத்தில் இனிதே நடைபெற்றுள்ளது. பண்டைத் தமிழ்ப்பண்பாடு பல்வேறு திருமணச் சடங்கு முறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. திருமணங்கள் இனிது நடைபெற்று இல்லறம் சிறப்பாக நிறைவுடன் அமையப்பெற்றுள்ளது. சிற்சில காரணங்களால் திருமண வாழ்வில் பல்வேறு குழப்ப நிலைகள் காணப்பட்டாலும், இறுதியில் மனம்மாறி தலைவன் தலைவி இருவரும் இணைந்து மகிழ்வுடன் இல்லறம் நடத்தியுள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

அடிக்குறிப்பு :

1. தொல்காப்பியம் நூற்பா - 142
2. தொல்காப்பியம் நூற்பா - 143
3. கலித்தொகை பாடல் - 114: 12-14
4. குறுந்தொகை பாடல் - 106 : 2-62
5. புறநானூறு பாடல் - 200: 13-15
6. கலித்தொகை பாடல் - 69: 4-73
7. புறநானூறு பாடல் - 343: 10-20
8. அகநானூறு பாடல் - 280: 4-12, 14
9. கலித்தொகை பாடல் - 103
10. குறுந்தொகை பாடல் - 146
11. பொ.வே.சோமசுந்தரனார் - குறுந்தொகை, கழக வெளியீடு - 1955
12. நற்றிணை - 12: 4-5
13. பரிபாடல் - 11
14. தொல்காப்பியம், கற்பியல் நூற்பா - 174
15. புறநானூறு -. 122:8-107
16. புறநானூறு - 250 : 3-6

பார்வை நூல்கள் :
1. தொல்காப்பியம், கற்பியல்
2. தொல்காப்பியத்தில் மணமுறைகள் - சிலம்பு நா.செல்வராசு
3. எட்டுத்தொகை - கழக வெளியீடு
4. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் – க.கைலாசபதி
5. அகத்திணைக் கோட்பாடும், சங்க அகக்கவிதை மரபும் - பெ.மாதையன்
6. சங்க இலக்கியத்தில் குடும்பம் - மாதையன்
7. சங்க இலக்கியத்தில் பொதுமக்கள் - முனைவர்.இராசரத்தினம்

********* ********* ********** ********* ********* ********** ********** **********